# தமிழ்

## தரம்

## 2

கல்வி வெளியீட்டுத் திணைக்களம்



சகல பாடநூல்களையும் இலத்திரனியல் ஊடாகப் பெற்றுக்கொள்வதற்கு
www.edupub.gov.lk வலைத்தளத்தை நாடுங்கள்.

முதலாம் பதிப்பு - 2016
இரண்டாம் பதிப்பு - 2017
மூன்றாம் பதிப்பு - 2018
நான்காம் பதிப்பு - 2019
ஐந்தாம் பதிப்பு - 2020

எல்லா உரிமையும் இலங்கை அரசினர்க்கே.

ISBN 978-955-25-0037-4

இந்நூல் கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தினால்
அரசாங்க அச்சகக் கூட்டுத்தாபனத்தில்
அச்சிடப்பட்டு, வெளியிடப்பட்டது.

Published by: Educational Publications Department
Printed by: State Printing Corporation

# தேசிய கீதம்

சிறீ லங்கா தாயே - நம் சிறீ லங்கா
நமோ நமோ நமோ நமோ தாயே

நல்லெழில் பொலி சீரணி
நலங்கள் யாவும் நிறை வான்மணி லங்கா
ஞாலம் புகழ் வள வயல் நதி மலை மலர்
நறுஞ்சோலை கொள் லங்கா
நமதுறு புகலிடம் என ஒளிர்வாய்
நமதுதி ஏல் தாயே
நம தலை நினதடி மேல் வைத்தோமே
நமதுயிரே தாயே - நம் சிறீ லங்கா
நமோ நமோ நமோ நமோ தாயே

நமதாரருள் ஆனாய்
நவை தவிர் உணர்வானாய்
நமதேர் வலியானாய்
நவில் சுதந்திரம் ஆனாய்
நமதிளமையை நாட்டே
நகு மடி தனையோட்டே
அமைவுறும் அறிவுடனே
அடல் செறி துணிவருளே - நம் சிறீ லங்கா
நமோ நமோ நமோ நமோ தாயே

நமதார் ஒளி வளமே
நறிய மலர் என நிலவும் தாயே
யாமெலாம் ஒரு கருணை அனைபயந்த
எழில்கொள் சேய்கள் எனவே
இயலுறு பிளவுகள் தமை அறவே
இழிவென நீக்கிடுவோம்
ஈழ சிரோமணி வாழ்வுறு பூமணி
நமோ நமோ தாயே - நம் சிறீ லங்கா
நமோ நமோ நமோ நமோ தாயே.

ஒரு தாய் மக்கள் நாமாவோம்
ஒன்றே நாம் வாழும் இல்லம்
நன்றே உடலில் ஓடும்
ஒன்றே நம் குருதி நிறம்

அதனால் சகோதரர் நாமாவோம்
ஒன்றாய் வாழும் வளரும் நாம்
நன்றாய் இவ் இல்லினிலே
நலமே வாழ்தல் வேண்டுமன்றோ

யாவரும் அன்பு கருணையுடன்
ஒற்றுமை சிறக்க வாழ்ந்திடுதல்
பொன்னும் மணியும் முத்துமல்ல - அதுவே
யான்று மழியாச் செல்வமன்றோ.

**ஆனந்த சமரக்கோன்**
கவிதையின் பெயர்ப்பு.

# முன்னுரை

சிறந்த கல்வியறிவும் பண்பாடும் நிரம்பப்பெற்ற ஒரு பரம்பரையினாலேயே உலகை மிகவும் அழகான இடமாக மாற்றமுடியும். அதனால் ஒரு நாட்டின் கல்வியை மிகவும் சக்திவாய்ந்ததாக மாற்றுவதற்கு எப்போதும் முயற்சிப்பது அவசியமாகும். இந்த பூகோள கிராமத்தில் தினமும் உருவாகும் பெறுமதியானதும் செழிப்பானதுமான வரையறையற்ற புதிய அறிவுக்காக எமது கல்வி முறைமையைப் பொருந்தச் செய்வது மிகச் சிறந்தது. இந்தப் புதிய போக்குகளுக்கு ஏற்றவாறாக நல்லதொரு மாணவர் சமுதாயமொன்றை உருவாக்குவது எமது கடமையாகும். இப்பெறுமதிமிக்க பணிக்காக தரம் வாய்ந்த கற்றல் சாதனங்களை உருவாக்குவது இத்திணைக்களத்தின் நோக்கமாகும்.

பாடநூல் என்பது ஓர் அற்புதமான கற்றல் சாதனமாகும். அது அறிவு, திறன், மனவெழுச்சி மிக்க பிரசைகளை உருவாக்குவதற்கு வழிகாட்டும் கலங்கரை விளக்காகும்.

இலவசக் கல்வியின் பெறுமதிமிக்க ஒரு பரிசாக இந்தப் பாடநூல் உங்களுக்கு இலவசமாக வழங்கப்படுகின்றது. அதற்காக அரசாங்கம் செலவிட்டுள்ள பெருந்தொகையான பணத்திற்கு பெறுமதி சேர்க்கும் பொறுப்பு உங்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இந்தப் பாடநூலை உரிய முறையில் பயன்படுத்தி, பாதுகாத்து, ஒரு பூரணமான பிரசையாக நாளைய உலகில் அடியெடுத்து வைப்பதற்கு உங்கள் அனைவருக்கும் ஆற்றல் கிடைக்க வேண்டுமென்று பிரார்த்திக்கின்றேன்.

இப்பாடநூலை உங்கள் கைகளில் தவழச்செய்யும் பணியில் பங்களிப்புச் செய்த எழுத்தாளர் மற்றும் பதிப்பாசிரியர் குழுக்களின் அங்கத்தவர்களுக்கும் கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தின் உத்தியோகத்தர்கள் அனைவருக்கும் எனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**பீ. என். அயிலப்பெரும**
கல்வி வெளியீட்டு ஆணையாளர் நாயகம்
கல்வி வெளியீட்டுத் திணைக்களம்
இசுருபாய
பத்தரமுல்ல
2020. 06. 26

| | |
|---|---|
| **கண்காணிப்பும் மேற்பார்வையும்** | **பீ. என். அயிலப்பெரும**<br>கல்வி வெளியீட்டு ஆணையாளர் நாயகம்,<br>கல்வி வெளியீட்டுத் திணைக்களம். |
| **வழிகாட்டல்** | **டபிள்யூ. ஏ. நிர்மலா பியசீலி**<br>கல்வி வெளியீட்டு ஆணையாளர் (அபிவிருத்தி),<br>கல்வி வெளியீட்டுத் திணைக்களம். |
| **இணைப்பாக்கம்** | **லெனின் மதிவானம்**<br>பிரதிக் கல்வி வெளியீட்டு ஆணையாளர்,<br>கல்வி வெளியீட்டுத் திணைக்களம். |
| | **யூ. எல். உவைஸ்**<br>உதவிக் கல்வி வெளியீட்டு ஆணையாளர்,<br>கல்வி வெளியீட்டுத் திணைக்களம். |
| **எழுத்தாளர் குழு** | **எம். ரெங்கராஜ்**<br>பணிப்பாளர் - ஓய்வு |
| | **தமிழின்பம் மாணிக்கராஜா**<br>ஆசிரியர் - ஓய்வு |
| **பதிப்பாசிரியர் குழு** | **பேராசிரியர் சபா ஜெயராஜா**<br>பேராசிரியர் - ஓய்வு |
| | **பேராசிரியர் எம். கருணாநிதி**<br>கொழும்புப் பல்கலைக்கழகம். |
| **ஓவியங்கள்** | **ஜனாப். எம். ஜே. எம். மன்சூர்**<br>பிரதி அதிபர்,<br>வித்யாலோக மகா வித்தியாலயம்,<br>பலாங்கொட. |
| **கணினி வடிவமைப்பு** | **ஆர். கவியாழினி**<br>கணினி வடிவமைப்பாளர்,<br>கல்வி வெளியீட்டுத் திணைக்களம். |

## தமிழ்மொழி வாழ்த்து

வாழ்க நிரந்தரம் வாழ்க தமிழ்மொழி
வாழிய வாழியவே!
வான மளந்த தனைத்தும் அளந்திடும்
வண்மொழி வாழியவே!

ஏழ்கடல் வைப்பினும் தன் மணம் வீசி
இசைகொண்டு வாழியவே!
எங்கள் தமிழ்மொழி எங்கள் தமிழ்மொழி
என்றென்றும் வாழியவே!

சூழ்கலி நீங்கத் தமிழ்மொழி ஓங்கத்
துலங்குக வையகமே!
தொல்லை வினைதரு தொல்லை யகன்று
சுடர்க தமிழ்நாடே!

வாழ்க தமிழ்மொழி வாழ்க தமிழ்மொழி
வாழ்க தமிழ்மொழியே!
வானம் அறிந்த தனைத்தும் அறிந்து
வளர்மொழி வாழியவே!


**- சுப்பிரமணிய பாரதியார் -**

# பொருளடக்கம்



| | | பக்கம் |
|---|---|---|
| 1 | இயற்கை அழகை இரசித்து மகிழ்வோம் | 1 |
| 2 | படம் பார்த்துக் கதை கூறுவோம் | 2 |
| 3 | செயல்களைக் கூறுவோம் | 3 |
| 4 | படம் பார்த்து வாசிப்போம் | 4 |
| 5 | என் அம்மா | 6 |
| 6 | நாங்கள் வாழும் வீடு | 7 |
| 7 | எறும்பு | 8 |
| 8 | இன்பமாய் வாழ்வோம் | 9 |
| 9 | உணவு உண்போம் | 10 |
| 10 | அன்புள்ளம் | 12 |
| 11 | விடுகதைகள் | 14 |
| 12 | சித்திரைப் புத்தாண்டு | 16 |
| 13 | குணங்கள் | 18 |
| 14 | செய்திகள் வாசிப்பது... | 20 |

| | | |
|---|---|---|
| 15 | பழங்கள் பேசுகின்றன | 22 |
| 16 | கிட்டிப்புள் விளையாட்டு | 24 |
| 17 | பசி தீர்ந்தது | 26 |
| 18 | ஏறாத பட்டம் | 28 |
| 19 | சேவலின் சாமர்த்தியம் | 30 |
| 20 | ஆலமரமும் நாணலும் | 32 |
| 21 | பகிர்ந்து உண்போம் | 34 |
| 22 | சுற்றுலா | 36 |
| 23 | வகுப்பில் பழக்கடை | 38 |
| 24 | இருவர் ஓட்டம் | 40 |
| 25 | விரல்கள் உரையாடுகின்றன | 42 |
| 26 | மிருகக்காட்சிச்சாலை | 44 |
| 27 | பூனையும் மானும் | 46 |
| 28 | கொன்றைவேந்தன் | 48 |

# 1. இயற்கை அழகை இரசித்து மகிழ்வோம்




# 2. படம் பார்த்துக் கதை கூறுவோம்



1

2





3

# 3. செயல்களைக் கூறுவோம்













# 4. படம் பார்த்து வாசிப்போம்

இது மரம்.

மரம் நிழல் தரும்.



இது நாய்.

நாய் வீட்டைக் காக்கும்.



இது மீன்.

மீன் நீரில் வாழும்.



இது கோழி.


கோழி முட்டை இடும்.





இது அணில்.

அணில் பழம் தின்னும்.



இது பட்டம்.

பட்டம் உயரப் பறக்கும்.



இது கப்பல்.

கப்பல் கடலிலே செல்லும்.



இது புத்தகம்.

நாங்கள் புத்தகம் வாசிப்போம்.

# 5. என் அம்மா



என் அம்மா அழகானவர்.

அவர் மிகவும் அன்பானவர்.

எனக்கு உணவு தந்திடுவார்.

எனக்கு உடை வழங்கிடுவார்.

நான் விரும்பியதைச் செய்திடுவார்.

# 6. நாங்கள் வாழும் வீடு



நல்ல நல்ல வீடு
நாங்கள் வாழும் வீடு

கல்லும் மண்ணும் சாந்தும்
கலந்து கட்டும் வீடு

நல்ல யன்னல் ஊடே
மெல்லக் காற்று வீசும்

கொட்டும் மழையில் எம்மைக்
காக்கும் எங்கள் வீடு

**மயிலங்கூடல்**
**த. கனகரத்தினம்**

# 7. எறும்பு



எறும்பு ஒன்று
ஊர்ந்து வந்தது
எதையோ கண்டு
நின்று பார்த்தது.

எறும்பு எங்கோ
திரும்பிச் சென்றது
எத்தனை பேருடன்
மீண்டும் வந்தது?

எல்லா எறும்பும்
மகிழ்ந்து சென்றன
எறும்பு பற்றி
என்ன நினைக்கிறீர்?

- அம்பி



# 8. இன்பமாய் வாழ்வோம்



காட்சி காணக் கண்கள்
ஒலியைக் கேட்கக் காதுகள்





மணத்தை முகர மூக்கு
சுவையை அறிய நாக்கு





மென்று உண்ணப் பற்கள்
உண்டு மகிழ வாய்





வேலை செய்யக் கைகள்
நடந்து செல்லக் கால்கள்





எழுத்து எழுத விரல்கள்
உணர்ந்து கொள்ள உடம்பு



இவற்றை நன்கு பேணி
இன்ப வாழ்வு வாழ்வோம்

# 9. உணவு உண்போம்



**தாய்** - சுதன், எல்லோரும் வாருங்கள். உணவு உண்போம். பிறகு விளையாடலாம்.

**தந்தை** - நன்றாகக் கை கழுவுங்கள். சவர்க்காரம் போட்டுக் கழுவுங்கள்.

**தாய்** - இதோ, இலைக்கஞ்சி. இது சத்து நிறைந்தது.


**சுதன்** - மணி, உனக்கு விருப்பமான கடலையும் உண்டு.

**மணி** - அம்மா, இந்த உருண்டை சுவையாக உள்ளது. இதை எப்படிச் செய்தீர்கள்?

**தாய்** - பயறு அவித்தேன். தேங்காய்ப்பூவையும் சீனியையும் கலந்தேன். பின்பு உருண்டையாகப் பிடித்தேன். இனிப்பாக இருக்கும்.

**தந்தை**- மகள், இதோ வாழைப்பழம். அந்த மாம்பழத்தையும் துண்டுகளாக வெட்டிக் கொண்டு வாருங்கள். நேரமாகிவிட்டது.

**தாய்** - அவசரம் வேண்டாம். மெல்ல மெல்லச் சுவைத்து உண்ணுங்கள்.



# 10. அன்புள்ளம்



மரத்திலே கூடு கட்டும்.
முட்டை இடும்.
குஞ்சு பொரிக்கும்.
பாடுபட்டு இரை தேடும்.
குஞ்சுகளுக்கு ஊட்டி மகிழும்.


''மியாவ் மியாவ்'' என்று அழைக்கும் குட்டி.
மெல்ல மெல்ல வரும் குட்டி.
துள்ளித்துள்ளி ஓடும் குட்டி.
தாயின் அன்பில் மகிழும் குட்டி.



‘‘கொக் கொக்’’ என்று அழைக்கும்.
குஞ்சுகள் யாவும் தேடி ஓடும்.
குப்பை மேட்டைக் கிளறும்.
குஞ்சுகளுக்கு இரை ஊட்டும்.



வாலைத் தூக்கி ஓடும்.
‘‘ம்மா’’ என்று அழைக்கும்.
தாய்ப்பசு கன்றினைத் தேடும்.
பாலூட்டி அன்பு காட்டும்.



# 11. விடுகதைகள்


1. கீழே வீசினால்
   மேலே வருவான்.
   அவன் யார்?



2. உயர உயரப் பறப்பான்.
   அவன் யார்?



3. ஒரு குப்பிக்குள்
   இரண்டு தைலம்.
   அது என்ன?



4. வயிறு நிறைந்தால்
   வானத்தில் பறப்பான்.
   அவன் யார்?



5. பச்சைப் பெட்டிக்குள்
தங்கக் கட்டிகள்.
அது என்ன?




6. சூரியன் பார்க்காத கிணறு.
அதற்குள் சுவையான
தண்ணீர். அது என்ன?



7. உணவை எடுப்பான்.
ஆனால் உண்ண மாட்டான்.
அவன் யார்?





8. இதயம்போல் துடிப்பிருக்கும்.
இரவு பகல் விழித்திருக்கும்.
அது என்ன?



# 12. சித்திரைப் புத்தாண்டு

சித்திரைமாதம் பிறந்தது. புத்தாண்டும் வந்தது. அதனை நாம் ''புதுவருடம்'' என்போம். பெரியவர்களுடன் சிறியவர்களும் மகிழ்ச்சியாகக் கொண்டாடுவோம்.

அதிகாலையில் நித்திரைவிட்டு எழும்புவோம். மருத்துநீர் வைத்து நீராடுவோம். புதிய ஆடைகள் அணிவோம். கோயிலுக்குப் போவோம். இறைவனை வணங்குவோம்.



புதுப்பானை வைத்து, பொங்கல் செய்வோம். முறுக்கு, வடை, மோதகம், வாழைப்பழம் என்பன பரிமாறி உண்போம். அயலவர்களுக்கும் கொடுப்போம். பெரியோரை வணங்குவோம்.

மாலையில் யாவரும் சேர்ந்து விளையாடுவோம். போட்டிகள் வைப்போம்.

அன்றைய நாளை மகிழ்ச்சியாகக் களிப்போம்.



# 13. குணங்கள்

**பசு**



சத்து நிறைந்த பாலினையே
தந்து நம்மைக் காத்திடுமே.
இத்தனை சாதுப் பிராணிதனை
எங்கேனும் நீ கண்டாயோ?

**நாய்**



நன்றி உள்ள உயிர்களிலே
நல்ல மிருகம் இதுவொன்றாம்
வென்றி கொண்ட வீரன்போல்
வீட்டைக் காத்து நின்றிடுமே.

**ஆடு**



குளிரைப் போக்க கம்பளியும்
குடிக்கப் பாலும் நமக்கெல்லாம்
அளிக்கும் நல்ல மிருகம் இது
அண்டிப் பிழைக்கும் நம்மை இது.

★வென்றி என்பது வெற்றியைக் குறிக்கும்

## சேவல்



கழுத்தை நீட்டிக் கூவிடுமே
காலைப் போதில் சிறகடித்தே
எழுந்திரு, விழித்திடு என்றதுவும்
எழுப்பித் தூக்கம் ஓட்டிடுமே.

## பூனை



பாலைக் குடித்தும் சாதுவைப் போல்
பஞ்சுக் காலால் நடந்திடுமே.
வேலை அதற்கு வேறில்லை
வீட்டில் எலிகள் பிடிப்பதுதான்.

## காகம்

உற்றார் உறவினர் அனைவரையும்
உண்ண அழைத்து உண்டிடுமே
செத்தால் ஒன்று  அவைகளிலே
சேர்ந்து யாவும் அழுதிடுமே!



**- அழ. வள்ளியப்பா**

# 14. செய்திகள் வாசிப்பது...



வணக்கம் நண்பர்களே!

இன்றையசெய்தி வாசிப்பது தேவகி.

பென்குயின்பற்றி வாசித்ததைக் கூறுகிறேன்.



இவை பறவைகள்தான்.

ஆனால், பறக்காத பறவைகள்.

எங்கு வாழ்கின்றன தெரியுமா?

பனிப்பிரதேசங்களில் வாழ்கின்றன.

இறக்கை போல இரண்டு கைகள்.

அவை நீரில் நீந்த உதவுகின்றன.

நிமிர்ந்தே அவை நடக்கின்றன.



செய்தி தொடர்கிறது...

வாசிப்பவர் நசீம்.

பென்குயினுக்கு விருப்பமான உணவு எது?

மீன் தான்.

அதனை, அது பகல் நேரங்களில் பிடிக்கும்.

பசி தீரும்வரை உண்ணும்.

குஞ்சுகளுக்கும் ஊட்டும்.

கூட்டம் கூட்டமாக வாழ்கின்றன.

குளிர் இல்லாவிட்டால் அவை இல்லை.

ஒற்றுமையையும் பாசத்தையும் அவற்றிடம்

நாம் கற்க வேண்டும்.

# 15. பழங்கள் பேசுகின்றன

## அன்னாசி



நான் அன்னாசிப்பழம். எனது தலையில் அழகான பச்சைக் கிரீடம். என் உடம்பு மஞ்சள் நிறம். என்னை நன்கு சுவைத்து உண்ணலாம்.


## வாழைப்பழம்



நான் அன்னாசியைப் போல் இல்லை. எனது தோலை நீங்கள் சுலபமாக உரிக்கலாம். என்னை சுவைத்தும் உண்ணலாம். ''ஏழைகளின் பழம்'' என நான் அழைக்கப்படுகின்றேன்.

## பலாப்பழம்

எனது நிறம் பச்சை. தோல் முள்ளு முள்ளாக இருக்கும். என்னைப் பிரித்தால் உள்ளே சுளைகள். அவை தேன் போல இனிக்கும். எல்லோரும்என்னை விரும்பி உண்பார்கள்.



## மாதுளம்பழம்




என்னுள் அழகிய முத்துக்கள் உள்ளன. அவை மிகவும் இனிமையானவை. அவற்றை சுவைத்து உண்ணலாம். நான் சத்துக்கள் நிறைந்த பழம்.

## மாம்பழம்

நான் ஓர் இனிய பழம். எனக்குப் பல சகோதரர்கள் உள்ளனர். அவர்கள் வெவ்வேறு சுவை தருவார்கள். நாம் இலகுவாகக் கிடைப்போம். எம்மைச் சுவைத்து மகிழுங்கள்.



## விளாம்பழம்




எனது ஓடு கடுமையானது. உள்ளே கபில நிறமாக இருப்பேன். அதனை இனிப்புடன் கலந்து உண்ணலாம். பால் சேர்த்து கலவையாகவும் குடிக்கலாம். உண்போர் வயிற்றுக்கு இதமாவேன்.

# 16. கிட்டிப்புள் விளையாட்டு

கிட்டிப்புள் மகிழ்ச்சியான கிராமிய விளையாட்டு. நாமும் விளையாடுவோம். வாருங்கள்!

கிட்டிப்புள்ளை குழியில் வைப்போம். பெரிய தடியால் உயர்த்தி அடிப்போம். எதிர் அணியினர், அதனைப் பிடிப்பார்கள். அப்போது ஆட்டம் இழப்போம். இல்லையேல், கிட்டிப்புள்ளை கையில் எடுப்பவர் குழியை நோக்கி எறிவார்.



விளையாடுபவர் அதனை அடிக்க வேண்டும். கிட்டிப்புள் பிடிக்கப்பட்டால் அடிப்பவர் ஆட்டம் இழப்பார். இல்லையேல் கிட்டிப்புள் விழுந்த இடம் வரை தடியால் அளக்கப்படும்.

எண்ணிக்கை நூறு ஆகும்வரை கிட்டிப்புள் அடிக்கப்படும். மீண்டும், கிட்டிப்புள் உயர்த்தி அடிக்கப்படும். அத்தூரம் எதிர் அணியினரால் ஓடிக் கடக்கப்படும். ஓடும்போது விடாமல் ஓடவேண்டும். வெற்றி பெறும் வரை விளையாடுவோம்.



# 17. பசி தீர்ந்தது



எனக்கு
நன்றாகப்பசிக்கிறது.
அதோ, திராட்சைப்
பழங்கள்! மிக உயரத்தில்
உள்ளனவே! எப்படி அதனை
உண்பது?


எனக்கு எட்டவில்லை. ''சீச்சீ'' இந்தப்
பழங்கள் புளிக்கும். (அப்போது மான்
ஒன்று வருகிறது.)

என்ன நரியாரே, முயற்சி செய்யாமலே போகிறீர். வாரும், பழங்கள் பறிப்போம். அதோ, மரக்குற்றி ஒன்று. அதை உருட்டி வருவோம். அதில் ஏறி, பழங்கள் பறிப்போம். (நரி மரக்குற்றியில் ஏறி பழங்களை பறிக்கிறது.)



மானாரே, நன்றி. நீரும் திராட்சைப் பழங்களை உண்ணும். எனக்கு பசி தீர்ந்தது.

# 18. ஏறாத பட்டம்



காற்று வீசியது. மெதுவாக வீசியது. பின்பு பலமாக வீசியது. இலைகள் அசைந்தன. கிளைகள் ஆடின. கடதாசித் துண்டு ஒன்று காற்றுக்கு மேலெழுந்தது. பறந்து ''தொப்'' என்று கீழே விழுந்தது.


மதன் அதனைப் பார்த்தான். ஒரு பட்டம் செய்ய விரும்பினான். வண்ணக் காகிதத்தை எடுத்தான். நூலை எடுத்தான். ஒட்டுப்பசை யையும் ஈர்க்கையும் எடுத்தான். மதன் சுதாவுடன் சேர்ந்து ஒரு பட்டத்தைச் செய்தான். மதனும் சுதாவும் பட்டத்தை ஏற்றினார்கள். அது ஏறவில்லை. கீழே விழுந்தது. மீண்டும் ஏற்றினார்கள். மீண்டும் விழுந்தது. மீண்டும் ஏற்றினார்கள். ஏறவில்லை. சுழன்று கீழே விழுந்தது.



அப்போது ஆசிரியர் அங்கே வந்தார். பட்டத்தைப் பார்த்தார். அதில் ஒரு பிழை இருப்பதை அறிந்தார். பக்கத்தில் இருந்த பலா இலையை எடுத்தார்.



மதனுக்கும் சுதாவுக்கும் காட்டினார். நடுக்காம்பின் இருபக்கமும் சமனாக இருந்தது. அதை அவர்களுக்குக் காட்டினார்.



அவ்வாறே சமனாகப் பட்டத்தைக் கட்டினார்கள். இருவரும் பட்டத்தை ஏற்றினார்கள். பட்டம் குருவி போல் மேலே எழுந்து, பறந்தது.



**பேராசிரியர். சபா. ஜெயராஜா**

# 19. சேவலின் சாமர்த்தியம்

சேவல் ஒன்று ஒரு கிராமத்தில் வசித்து வந்தது. அது தினமும் அதிகாலையில் கூவும். வேலைக்குச் செல்லும் அனைவரையும் எழுப்பி விடும். இவ்வாறு தினமும் சேவல் தன் கடமையைச் சரிவரச் செய்து வந்தது.



ஒருநாள் அச்சேவல் வயல் வெளிகளில் மேய்ந்து திரிந்தது. பின் மரம் ஒன்றின் மீது களைப்புத் தீர ஓய்வெடுத்துக் கொண்டிருந்தது.

அந்தநேரம் வஞ்சக நரி ஒன்று அப்பக்கமாக வந்தது. மரத்தின் மீது இருந்த சேவலைக் கண்டது. உடனே அதன்வாயில் எச்சில் ஊறத் தொடங்கியது. ‘எப்படி இச்சேவலை உண்ணலாம்’? என எண்ணியது.



நரி : சேவல் அண்ணே, ''இன்றிலிருந்து பறவைகளும் விலங்குகளும் ஒற்றுமையுடன் வாழவேண்டும்'' என்பது காட்டு ராஜாவின் உத்தரவு.

சேவல் : அப்படியா! உண்மையாகவா?

நரி : சந்தேகமாக இருந்தால் கீழே வந்துதான் பாருங்களேே!

(சேவல் விழிப்படைந்தது)

சேவல்: தம்பி, தூரத்தில் எம் நண்பர்கள் சிலர் வருகிறார்கள். அவர்களும் வந்து சேரட்டும். நானும் கீழே வருகின்றேன்.

(சற்று நேரத்தின் பின்)


சேவல் : அட, யார் வருகிறார்கள் பாருங்கள்? கூட்டமாக வேட்டை நாய்கள் அல்லவா!

''கொக்கரக்கோ...
கொக்கரக்கோ....''

(நரி திரும்பிப் பாராமல்
ஓட்டம் பிடித்தது.)



# 20. ஆலமரமும் நாணலும்




ஆலமரம் ஆற்றோரம்
ஆற்றோரம் காற்றடிக்கும்
ஆலமரம் காற்றடித்தும்
அசையாமல் நின்றிருக்கும்!

நாணலுண்டு ஆற்றோரம்
நான்கு பக்கம் காற்றடிக்கும்
தான்வளைந்து கொடுப்பதனால்
தாங்குகிற நாணலுண்டு!

தலைநிமிர்ந்த ஆலமரம்
சாய்வதுண்டு புயல்காற்றில்!
தலைகுனிந்த நாணல்எனில்
தலைநிமிரும் புயல் ஓய்ந்தால்!

தனக்குநிகர் இல்லையென்பார்
சறுக்கிவிழ நேர்வதுண்டு!
பணிவுடனே நடந்துகொண்டால்
பலமான வெற்றியுண்டு!

**- செல்ல கணபதி**



# 21. பகிர்ந்து உண்போம்



மரம் ஒன்று கிளைகள் பரப்பி வளர்ந்திருந்தது. பல பறவைகள் அங்கு வாழ்ந்து வந்தன. ஒருநாள் விடாமல் மழை பெய்து கொண்டிருந்தது.

தாய்க் கிளியும் குஞ்சும் மரப்பொந்தினுள் இருந்தன.

குஞ்சுக்குப் பசித்தது. ''கீச்..கீச்'' என்று கத்தியது. தாய்க்கிளிக்கு என்ன செய்வதென்று தெரியவில்லை. வெளியே பார்த்துக் கொண்டிருந்தது.



குருவி ஒன்று இதனைப்
பார்த்தது. குஞ்சின் பசியைப்
புரிந்து கொண்டது.
தன் கூட்டிலிருந்த
மாம்பழத்துண்டு ஒன்றை,
கிளியிடம் கொடுத்தது.
கிளி நன்றி கூறியது.

''பகிர்ந்து உண்ணுதல் நல்ல பண்பாகும்''

# 22. சுற்றுலா

எமது நாடு இலங்கை. இயற்கை அழகு நிரம்பியது. கடந்த மாதம் கண்டிக்குச் சுற்றுலா சென்றோம். அங்கு, இயற்கை அழகைக் கண்டோம்.

மலைநாடு பச்சைப் பசேல் எனக் காட்சி தந்தது. சிறியசிறிய அருவிகளின் பாய்ச்சல் அழகாக இருந்தது.



சென்ற சில இடங்களில் நெற்பயிர்களைக் கண்டோம். விதம் விதமான மரக்கறி வகைகளையும் கண்டோம்.

தேயிலை றப்பர் மரங்கள் நிறைந்து பசுமையாகக் காட்சி தந்தன.



பனி மூட்டமாக இருந்தது. நன்கு குளிர்ந்தது. பாய்ந்தோடும் ஆற்றில் குளிக்க விரும்பினோம். ஆனால், எம்மை அப்பா தடுத்துவிட்டார். ஆயினும், சின்னச்சின்னப் படகில் ஏறி ஆற்றிலே சென்றோம். அது எமக்குப் புதிய அனுபவம். இந்தச் சுற்றுலாவை என்னால் மறக்கமுடியாது.

# 23. வகுப்பில் பழக்கடை

**மாணவர்கள் :** வாருங்கள்... வாருங்கள்.
பழங்கள் வாங்குங்கள்.
சுவைத்துப் பாருங்கள்.

**ஆசிரியர் :** ஆம், வந்துவிட்டோம்.
என்ன பழங்கள் இருக்கின்றன?

**மாணவன் 1 :** வாழைப்பழம், மாம்பழம், பப்பாசிப் பழம், விளாம்பழம், தோடம்பழம்...

**மாணவன் 2:** இதோ, என்னிடம் அன்னாசிப்பழம், கொய்யாப்பழம், ஜம்பு, நெல்லிக்கனி ஆகியவை இருக்கின்றன.

**ஆசிரியர் :** அவற்றின் விலைகளை எழுதி வைத்திருக்கிறீர்களா? அவற்றைக் காட்சிப்படுத்துங்கள்.

**மாணவன்1 :** இதோ, எழுதி வைத்திருக்கின்றேன். உங்களுக்குத் தெரியும்படி நான் வைக்கின்றேன்.

**ஆசிரியர் :** எனக்கு வாழைப்பழம் வேண்டும்.



**மாணவன் 1:** எத்தனை பழங்கள் தேவை?

**ஆசிரியர் :** எனக்கு இரண்டு வாழைப்பழங்கள் தாருங்கள். ஒரு விளாம்பழமும் தாருங்கள்.

**மாணவன் 1:** இருபது ரூபாய் தாருங்கள்.

**ஆசிரியர் :** இதோ இருபது ரூபாய். மற்றவர்களும் பழங்கள் வாங்க வருவார்கள். அழகாக அடுக்கி வையுங்கள்.

**மாணவன் 1:** நன்றி!

# 24. இருவர் ஓட்டம்

வேட்டைக்காரன் நாய் ஒன்றை வளர்த்து வந்தான். ஒருநாள் வேட்டை ஆட, காட்டிற்குப் போனான். நாயும் அவனுடன் சென்றது.

பெரிய மரங்கள், கொடிகள், செடிகள் என அடர்ந்த காடு. அவர்களை முயல் ஒன்று கண்டது. பயந்து ஓடியது.

''ஓடு அதைத் தப்பவிடாதே'' என்று வேட்டைக்காரன் கூறினான்.



நாய், முயலைத் துரத்தியது.

சொற்ப நேரம் கழித்து நாய் மட்டும் திரும்பியது.

''ஒரு முயலைப் பிடிக்க உன்னால் முடியவில்லை, சீ போ!''

'' நீ ஏன் முயலைப் பிடிக்கவில்லை?''



இருவரும் ஓடினோம். ஆனால், எங்கள் இலக்குகளோ வேறுபட்டவை.

''முயல் ஓடியது. நானும் ஓடினேன். தன் உயிரைக் காப்பாற்ற முயல் ஓடியது. நான் அதைப் பிடிக்க ஓடினேன். உயிரைக் காப்பாற்ற ஓடுபவர்களுக்கு ஆற்றல் அதிகம். அதனால் முயல் தப்பிவிட்டது.''

# 25. விரல்கள் உரையாடுகின்றன

**கட்டைவிரல்** - நாம் ஐவர். எல்லோரும் ஒற்றுமையாக இருக்கிறோம்.

**சுட்டுவிரல்** - அப்படி நீ கூற முடியாது.

**கட்டைவிரல்** - ஏன்?

**சுட்டுவிரல்** - இன்று உனக்குப் பெறுமதி குறைந்து விட்டது.

**கட்டைவிரல்** - ஏன் அப்படிக் கூறுகிறாய்?

**சுட்டுவிரல்** - இன்று, இந்த உலகம் வீட்டிற்குள் சுருங்கி விட்டது. தூர இருப்பவர்களுடன் முகம் பார்த்துக் கதைக்கலாம்.

**சின்னவிரல்** - அது எமக்கும் தெரியும்.

**சுட்டுவிரல்** - அப்படிக் கதைக்கும் தொலைபேசியை அழுத்துவது நான்தானே.

**கட்டைவிரல் -** அதிகம் பேசாதே. தொலைபேசியை கையில் எடுப்பதற்கு நாம் அனைவரும் தேவை.

**சுட்டு விரல்** - ஆனால் கையடக்கத் தொலைபேசியின் திரையை மெல்லத் தடவி அழுத்துவது நான் தான். என்னால்தானே முடியும்.

**சின்ன விரல்** - அதனைக் கூட ஒரு கையினால் தூக்க ஐந்து விரல்கள் வேண்டும்.

**சுட்டு விரல்** - அதை நான் மறுக்கவில்லை. சுட்டுவிரல்தானே, மடிக் கணினியையும் இயக்குகிறது.

**சின்ன விரல்** - ஆம் புரிகிறது.

**ஏனைய விரல்கள்-** சரி... சரி... உங்கள் சண்டையை நிறுத்துங்கள். நாம் என்றும் ஒற்றுமையாக இருக்க வேண்டும். எல்லோரும் எல்லோருக்கும் உதவுபவர்களாக வாழவேண்டும்.

# 26. மிருகக்காட்சிச்சாலை

ஞாயிற்றுக்கிழமை எமக்குப் பாடசாலை விடுமுறை. மிருகக்காட்சிச்சாலைக்குச் சென்றோம்.

நாரை, கொக்கு, கிளி வாசலில் சுதந்திரமாகத் திரிந்தன. குரங்குகளும் கூடுகளில் மட்டுமன்றி பரந்த வெளியிலும் உலாவின.



சிங்கத்தின் கர்ச்சனை கேட்டது. புலி, சிறுத்தை, கரடி, சிங்கம் யாவும் பெரிய கூடுகளில் உலாவிக்கொண்டு இருந்தன.

சின்னக் குளம் ஒன்றை கண்டோம். அன்னம், வாத்து, தாரா அங்கு நீந்துவதைக் கண்டோம். ஒட்டகம், வரிக்குதிரை, ஒட்டகச் சிவிங்கியையும் பார்த்தோம்.



மாலையில் யானை நடனம் பார்த்தோம். பாம்புகளைக் கண்டு பயந்தோம். இருளத் தொடங்கியது. அதனால் வீடு திரும்பினோம்.

# 27. பூனையும் மானும்



ஒரு காட்டில் பூனையும் மானும் நண்பர்களாக இருந்தன. அதே காட்டில் காகமும் வசித்து வந்தது.

ஒருநாள் பூனையும் மானும் உணவு தேடிச் சென்றன. அவைகளை, கரடி ஒன்று துரத்தியது.

பூனை விரைந்து ஓடி மரத்தில் ஏறியது. மானால் ஏற முடியவில்லை. காகம் இதனைக்

கண்டது. ‘எப்படி மானுக்கு உதவலாம்’? என யோசித்தது. மானுக்கு அருகில் வந்தது. ‘‘நிலத்திலே விழுந்து, இறந்தவர் போல இரு’’ என்றது.



மானும் அப்படியே செய்தது. கரடி அருகில் வந்து பார்த்தது. மோப்பம் பிடித்தது. மான் மூச்சு விடவில்லை. அது இறந்து விட்டது என கரடி நினைத்தது. திரும்பிச் சென்றுவிட்டது. கரடி மறைந்ததும் மான் துள்ளி எழுந்தது. காகத்துக்கு நன்றி கூறியது. தன்னால் மானுக்கு உதவ முடியவில்லையே என்று பூனை வருந்தியது.

# 28. கொன்றைவேந்தன்

- அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்.
- எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும்.
- கிட்டாதாயின் வெட்டென மற.
- குற்றம் பார்க்கில் சுற்றம் இல்லை.
- தந்தை சொல் மிக்க மந்திரம் இல்லை.
- தாயிற் சிறந்ததொரு கோயிலும் இல்லை.
- திரைகடல் ஓடியும் திரவியம் தேடு.
- மருந்தேயாயினும் விருந்தோடு உண்.
- முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும்.
- மூத்தோர் சொன்ன வார்த்தை அமிர்தம்.